# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

# 1990 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, உள்நாட்டு நம்பிக்கைப் பொறுப்புப் பற்றுச் சீட்டுக்கள் சட்டம்

---

*[1990 மாச்சு மாதம் 6 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*1990 மாச்சு 9 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

---

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 75 தபாற் செலவு : ரூபா 1.00

# 1990 ஆம் ஆண்டின் 14 இலக்க, உள்நாட்டு நம்பிக்கைப் பொறுப்புச் பற்றுச் சீட்டுக்கள் சட்டம்

[1990, மாச்சு மாதம் 06 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ—ஓ. 6/89

குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இயைய உள்நாட்டு நம்பிக்கைப்பொறுப்புப் பற்றுச்சீட்டுகளை எழுதி நிறைவேற்றுவதற்கும், அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கும் ஏற்பாடு செய்வதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப் பெயர்.

1. இச்சட்டம், 1990 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, உள்நாட்டு நம்பிக்கைப்பொறுப்புப் பற்றுச்சீட்டுகள் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

இலங்கையின் ஆள்புலத்தினுள் இடம்பெயர்ப்பதற்கும் விற்பதற்குமென பண்டங்களுக்கான நம்பிக் கைப்பொறுப்பு பற்றுச்சீட்டு.

2. (1) எவரேனுமாள், இலங்கையின் ஆள்புலத்தினுள் இடம்பெயர்த்து விற்பதற்கான நோக்கங்களுக்காகத் தாம் பண்டங்களைக் கொள்வனவு செய்வதற்கு உத்தேசிக்கின்றாரென ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட கடன்வழங்கு முகவர்நிலையத்துக்கு அவரால் செய்யப்படும் கூற்றொன்றின் மீது அத்தகைய ஆள் பண்டங்களுக்கான கொடுப்பனவைச் செய்யும் நோக்கத்துக்காகவும் அத்துடன் அவற்றை இடம்பெயர்த்து விற்றலுடனும் இடம்பெயர்த்து விற்பதற்கு ஆயத்தஞ்செய்தலுடனும் சம்பந்தப்பட்ட செலவினத்தை ஈடு செய்யும் நோக்கத்துக்காகவும், (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுகின்ற ஆவணமொன்றை (அந்த ஆவணம் இதனகத்துப்பின்னர் "உள்நாட்டு நம்பிக்கைப் பொறுப்புப் பற்றுச்சீட்டு" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) அத்தகைய முகவர் நிலையம் சார்பாக நிறைவேற்றுவதன்மேல், கடன், மேலதிக பற்று என்றவகையான அல்லது வேறுவகையான முற்பணங்களை அத்தகைய முகவர் நிலையத்திடமிருந்து பெற்றுக்கொள்ளுமிடத்து, அந்த நம்பிக்கைப் பொறுப்புப் பற்றுச்சீட்டு தொடர்பாகவும் அது தொடர்புபட்டுள்ள பண்டங்கள் தொடர்பாகவும் 3 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(2) இவ்வுட்பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்கியொழுகுவதற்கென (1) ஆம் உட்பிரிவில் கூறப்பட்ட சூழ்நிலைகளில் எவரேனுமாளினால் எழுதி நிறைவேற்றப்பட்ட ஆவணமொன்று, அந்த ஆவணம் தொடர்புபட்டுள்ள பண்டங்கள் தொடர்பில் அவ்வாளின் பேரிலான பின்வரும் பொறுப்பேற்றங்களை கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) பண்டங்கள் எந்த முகவர் நிலையத்தின் சார்பாக நிறைவேற்றப்படுகின்றனவோ அந்த முகவர் நிலையத்துக்காக அவற்றை நம்பிக்கைப் பொறுப்பில் வைத்திருப்பதற்கும், பண்டங்களை அல்லது அவற்றைக் கொண்டுள்ள பொதிகளை அல்லது பெட்டிகளைக் குறித்துரைக்கப்பட்டவொரு முறையில் அடைய நாடுவதற்கும், அத்துடன் பண்டங்களை இடம்பெயர்த்து விற்கும்வரை அவற்றைக் குறித்துரைக்கப்பட்ட வளவுகளில் வைத்திருப்பதற்கும் ஆன பொறுப்பேற்றலொன்று ;

(ஆ) அப்பண்டங்களின் விற்பனையினலான வரும்படிகளை அல்லது அத்தகைய வரும்படிகளில் குறித்துரைக்கப்பட்டவொரு விகிதாசாரத்தை நம்பிக்கைப்பொறுப்பில் வைத்திருப்பதற்கும் பெறப்பட்டவாறு காலத்துக்குக்காலம் அவற்றை முகவர் நிலையத்துக்குச் செலுத்துவதற்கும் ஆன பொறுப்பேற்றலொன்று ;

(இ) முகவர் நிலையத்தின் பெயரில் மீளளித்தல் அடிப்படையொன்றன் மீது பண்டங்களின் முழுமையான காப்புறுதி செயற்படற்பாலதான பெறுமதிக்கு காப்புறுதி செய்யப்படற்பாலனவான எல்லா ஆபத்துக்களுக்கும் எதிராக அவற்றைக் காப்புறுதி செய்வதற்கும், இழப்பின் விடயத்தில் காப்புறுதிப்பணங்களை விற்பனையினலான வரும்படிகளைப்போன்று அதே முறையில் முகவர் நிலையத்துக்குச் செலுத்துவதற்கும் ஆன பொறுப்பேற்றலொன்று ;

(ஈ) அப்பண்டங்களை அல்லது அப்பண்டங்களுள் எவற்றையும் காசுக்காகவல்லாது வேறுவகையாக விற்றலாகாது என்ற பொறுப்பேற்றலொன்று;

(உ) அதற்கென எழுத்தில் கோரப்படுவதன்மேல், முகவர் நிலையத்துக்கு, அல்லது அதன் கட்டளைக்கு, அப்போதைக்கு இடம்பெயர்க்கப்படாதிருக்கக்கூடியனவான அல்லது விற்கப்படாதிருக்கக்கூடியனவான அப்பண்டங்களுள் அத்தகையவற்றை ஒப்படைப்பதற்கான பொறுப்பேற்றலொன்று;

(ஊ) காலத்துக்குக்காலம் முன்னறிவித்தலின்றி முகவர் நிலையம் அப்பண்டங்கள் வைத்திருக்கப்படும் வளவுகளினுட் பிரவேசித்து சோதனையிடுவதற்கு முகவர் நிலையத்துக்கு அனுமதிப்பதற்கும், வளவுகளில் இருக்கக்கூடியவாறன அப்பண்டங்களுள் அத்தகையவற்றின் கையிருப்பை எடுப்பதற்கும் ஆன பொறுப்பேற்றலொன்று;

(எ) அப்பண்டங்கள் இடம்பெயர்க்கப்பட்டு விற்கப்படுவதன்மேல், முகவர் நிலையத்தினல் அவ்வாறு செய்யும்படி கோரப்படின், அத்பண்டங்கள் தொடர்பான உரித்தாவணங்களையும் வேறு இடம்பெயர்ப்பு ஆவணங்களையும் முகவர்நிலையத்திடம் ஒப்படைப்பதற்கான பொறுப்பேற்றலொன்று;

(ஏ) முகவர் நிலையத்தின் பெயரில் அப்பண்டங்களைக் குறித்துரைக்கப்பட்ட வளவுகளில், அல்லது குதத்தில் களஞ்சியப்படுத்துவதற்கான பொறுப்பேற்றலொன்று; அத்துடன்

(ஐ) உள்நாட்டு நம்பிக்கைப்பொறுப்புப் பற்றுச்சீட்டு தொடர்பிலான கொடுக்கல்வாங்கல் ஆவணங்களையும், பண்டங்களையும் வரும்படிகளையும், உள்நாட்டு நம்பிக்கைப்பொறுப்புப் பற்றுச்சீட்டு எந்த ஆளினல் எழுதி நிறைவேற்றப்படுகின்றதோ அந்த ஆளின் வேறெவையேனும் அல்லது வேறெல்லாக் கொடுக்கல்வாங்கல்கள், ஆவணங்கள், பண்டங்கள் அத்துடன் வரும்படிகள் என்பவற்றிலிருந்து தனிவேருகவும் பிறிம்பாகவும் வைத்திருப்பதற்கான பொறுப்பேற்றலொன்று-

(3) இரண்டாம் உட்பிரிவில் அடங்கியுள்ளதெதுவும் ஏதேனும் பொறுப் பேற்றல் ஆவணத்தில், அவ்வுட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட பொறுப் பேற்றலுடன் சேர்த்து மேலதிகமான நிபந்தனைகள் அல்லது விதிப்புக் கள் உள்ளடக்கப்படுவதைத் தடுப்பதாகக் கருதப்படுதலாகாது.

**இச்சட்டம் ஏற்புடையதாக வுள்ள நம்பிக் கைப் பொறுப் புப் பற்றுச் சீட்டுகளின் சட்டப்பயன்.**

3. (1) உள்நாட்டு நம்பிக்கைப்பொறுப்புப் பற்றுச்சீட்டொன்று 2 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு இயைய எவரேனுமாளினால் எழுதி நிறைவேற் றப்பட்டுள்ளவிடத்தும், அந்த நம்பிக்கைப்பொறுப்புப் பற்றுச்சீட்டு எந் தப் பண்டங்கள் தொடர்பான அந்தப் பண்டங்கள் சம்பந்தமான விற் பனை உண்டியல் ஒன்றாக அது ஆவணப் பதிவுக் கட்டளைச்சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்படுமிடத்தும், நம்பிக்கைப்பொறுப்புப் பற்றுச்சீட்டின் கீழ் முகவர் நிலையத்துக்கு வருமதியாகவுள்ளது அல்லது செலுத்தற்பாற பாலதாகவரவுள்ளது எனக் கூறப்பட்ட ஏதேனும் பணம் வருமதியாகவும் செலுத்தப்படாதும் இருக்கும் காலத்தின்போது பின்வரும் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டும் :—

(அ) முகவர்நிலையமானது ஏதேனும் நீதிமன்றத்தின் தீர்வையை நிறை வேற்றுவதில் வேறெவரேனுமாளினால் பண்டங்கள் கைப்பற்றப் படும் பட்சத்தில், எந்த வழக்கின்போது கைப்பற்றுகை பயனு றுத்தப்பட்டதோ அந்த வழக்கில் அந்த நீதிமன்றத்துக்குச் செய்யப்படும் விண்ணப்பத்தின்மீது, பண்டங்கள், முகவர்நிலை யத்தினால் தெரிவுசெய்யப்பட்டு நீதிமன்றத்தினால் அங்கீகரிக்கப் பட்ட ஏலவிற்பனையாளரினால் ஒன்றில் பகிரங்க ஏல விற்பனை மூலம், அல்லது நீதிமன்றம் பணிக்கக்கூடியவாறான அத்தகைய முறையில், அத்துடன் நீதிமன்றத்தினால் வழங்கப்படக்கூடிய வாறான அத்தகைய பணிப்புகளுக்கிணங்க விற்கப்படுதல் வேண் டுமெனப் பணிக்கின்ற கட்டளையொன்றுக்கு உரித்துடையதாதல் வேண்டும். அத்தகைய பண்டங்கள் விற்கப்படுவதன்மேல், முகவர்நிலையமானது, விற்பனையினாலான வரும்படிகளிலிருந்து உள்நாட்டு நம்பிக்கைப்பொறுப்புப் பற்றுச்சீட்டின்கீழ் வருமதி யான தொகையை வைத்திருப்பதற்கு உரித்துடையதாதல் வேண்டுமென்பதுடன், விற்பனையினாலான வரும்படிகளின் மீதி ஏதேனுமிருப்பின் அது, நீதிமன்றத்துக்குச் செலுத்தப்பட்டு பண்டங்கள் எந்தத்தீர்வையின்கீழ் கைப்பற்றப்பட்டனவோ அந்தத் தீர்வையை நிறைவேற்றுவதில் பண்டங்களின் விற்பனை யினாலான வரும்படிகளெனக் கருதப்படுதலும் வேண்டும்.

(ஆ) முகவர்நிலையமானது, உள்நாட்டு நம்பிக்கைப்பொறுப்புப் பற்றுச் சீட்டு எந்த ஆளினால் எழுதி நிறைவேற்றப்படுகின்றதோ அந்த ஆள் கடனிறுக்கவகையற்றவராகும் பட்சத்தில், அத்தகைய கடனிறுக்க வகையற்றலின்மீது எந்த நீதிமன்றத்தில் வழக்கு நடவடிக்கைகள் முடிவுறுநாள்ளனவோ அந்த நீதிமன்றத்திட மிருந்து, உள்நாட்டு நம்பிக்கைப்பொறுப்புப் பற்றுச்சீட்டு எப் பண்டங்கள் தொடர்பானதோ அப்பண்டங்கள் முகவர்நிலையத் திடம் ஒப்படைக்கப்பட்டு, முகவர்நிலையத்தினால் தெரிவுசெய்யப் பட்டு நீதிமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஏலவிற்பனையாள ரொருவரினால் ஒன்றில் பகிரங்க ஏலவிற்பனைமூலம் அல்லது நீதி மன்றம் பணிக்கக்கூடியவாறான அத்தகைய வேறுமுறையில், அத் துடன் நீதிமன்றத்தினால் வழங்கப்படக்கூடியவாறான அத்தகைய

பணிப்புகளுக்கிணங்க விற்கப்படுதல் வேண்டுமெனப் பணிக்கின்ற கட்டளையொன்றைப் பெறுவதற்கு உரித்துடையதாதல் வேண்டும். அத்தகைய பண்டங்கள் விற்கப்படுவதன்மேல், முகவர்நிலையமானது விற்பனையினாலான வரும்படிகளிலிருந்து உள்நாட்டு நம்பிக்கைப்பொறுப்புப் பற்றுச்சீட்டின்கீழ் வருமதியாகவுள்ள தொகையை வைத்திருப்பதற்கு உரித்துடையதாதல் வேண்டுமென்பதுடன், விற்பனையினாலான வரும்படிகளின்மீதி ஏதேனுமிருப்பின் அது, கடனிறுக்கவகையற்றவரின் மரணச் சொத்தினது சாட்டுதற்காரரின் வரவுக்கு நீதிமன்றத்திற்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்;

(இ) இரண்டாம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (உ) என்னும் பந்தியிற் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் பொறுப்பேற்றலுக்கு இணங்கியொழுக எவையேனும் பண்டங்கள் முகவர்நிலையத்திடம் ஒப்படைக்கப்படுமிடத்து முகவர்நிலையமானது, அவ்வாறு ஒப்படைக்கப்பட்ட பண்டங்களை அவை அகற்றப்பட்டபின்னர், அல்லது உள்நாட்டு நம்பிக்கைப்பொறுப்புப் பற்றுச்சீட்டை எழுதி நிறைவேற்றுகின்ற ஆள் பண்டங்கள் வைத்திருக்கப்படும் வளவுகளில் விற்பதற்குச் சம்மதித்தால் அத்தகைய வளவுகளில் விற்கலாம். முகவர்நிலையமானது பண்டங்களின் விற்பனையினாலான வரும்படிகளிலிருந்து உள்நாட்டு நம்பிக்கைப்பொறுப்புப் பற்றுச்சீட்டின்கீழ் அதற்கு வருமதியாகவுள்ள தொகையை வைத்திருப்பதற்கு உரித்துடையதாதல் வேண்டுமென்பதுடன், மீதி ஏதேனுமிருப்பின் உள்நாட்டு நம்பிக்கைப்பொறுப்புப் பற்றுச்சீட்டு எவ்வாளினால் எழுதி நிறைவேற்றப்பட்டதோ அவ்வாளுக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்; அத்துடன்

(ஈ) உள்நாட்டு நம்பிக்கைப்பொறுப்புப் பற்றுச்சீட்டு, எந்த ஆளினால் எழுதி நிறைவேற்றப்பட்டதோ அந்த ஆள், மீறுகையொன்றைப் புரிந்தால் அல்லது உள்நாட்டு நம்பிக்கைப்பொறுப்புப் பற்றுச்சீட்டில் அடங்கியுள்ள பொறுப்பேற்றலொன்றாகவுள்ளதும் 2 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ளதுமான ஏதேனும் பொறுப்பேற்றலுக்கு இணங்கியொழுகத் தவறினால், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவரால் செய்யப்படும் சுருக்கமுறை விளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், மூன்றாண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு, அல்லது உள்நாட்டு நம்பிக்கைப்பொறுப்புப் பற்றுச்சீட்டின்கீழ் முகவர்நிலையத்துக்கு வருமதியாகவுள்ளதென அல்லது செலுத்தற்பாலதாக வரவுள்ளதெனக் கூறப்பட்ட பணத்தொகைக்குக் குறையாத ஒரு தொகையிலானதும் அத்தொகையின் மும்மடங்கை விஞ்சாததுமான ஒரு குற்றப்பணத்திற்கு ஆளாதலும் வேண்டும்.

(2) உள்நாட்டு நம்பிக்கைப்பொறுப்புப் பற்றுச்சீட்டொன்றின்கீழ் வருமதியாகவுள்ள தொகை, அங்கீகரிக்கப்பட்ட கடன்வழங்கு முகவர் நிலையத்திற்குச் செலுத்தப்படுதல் அல்லது அதனால் அறவிடப்படுதல் தொடர்பாக இச்சட்டத்தின் ஏற்பாடுகள், எந்த எழுத்திலான அல்லது வேறுசட்டத்தின்கீழ் அத்தொகையை அல்லது அத்தொகையின் ஏதேனும் பாகம் ஏலவே செலுத்தப்பட்டு அல்லது அறவிடப்பட்டு இருக்குமிடத்து வருமதியாகவுள்ள மீதியை அறவிடும் நோக்கத்துக்காக முகவர் நிலையத்துக்கு ஏதேனும் உரிமை அல்லது பரிகாரம் கிடைக்கக்கூடியதாக வுள்ளதோ அந்த ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் அல்லது வேறு சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு மேலதிகமானவையாக இருத்தல் வேண்டும்; அவற்றைப் பதிலிடுவனவாகவோ மதிப்புக் குறைப்பனவாகவோ அல்ல.

ஆட்கள் குழுக களினால் புரியப் படும் தவறுகள்.

4. இச்சட்டத்தின்கீழான தவறொன்று ஆட்கள் குழுவொன்றினால் புரியப்படுமிடத்து, அப்பொழுது—

(அ) அந்த ஆட்கள் குழு கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாக இருக்குமாயின், அக் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் ஒவ்வொரு பணிப்பாளரும் முகாமையாளரும் அல்லது செயலாளரும்;

(ஆ) அந்த ஆட்கள் குழு ஒரு குழுமமாக இருக்குமாயின், அக்குழுமத்தின் ஒவ்வொரு பங்காளியும்; அத்துடன்

(இ) அந்த ஆட்கள் குழு கூட்டிணைக்கப்படாத குழுவொன்றாக இருக்குமாயின், அத்தகைய குழுவின் உறுப்பினரொருவராகவுள்ள ஒவ்வொரு தனியாளும்,

அத்தவறுக்குக் குற்றவாளியாகக் கருதப்படுதல் வேண்டும்:

ஆயின், அத்தகைய கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பணிப்பாளர் அல்லது அலுவலர் ஒருவர் அல்லது அத்தகைய குழுமத்தின் பங்காளி ஒருவர், அத்தவறு தமது அறிவின்றிப் புரியப்பட்டதென அல்லது அத்தகைய தவறு புரியப்படுவதைத் தடுப்பதற்குத் தகுந்த எல்லா விழிப்புக் கவனத்தையும் தாம் பிரயோகித்தாரென எண்பிப்பாராயின், அத்தகைய தவறுக்குக் குற்றவாளியாகக் கருதப்படுதலாகாது.

அங்கீகரிக்கப் பட்ட கடன் வழங்கு முகவர் நிலையம்.

5. (1) இச்சட்டத்தில் "அங்கீகரிக்கப்பட்ட முகவர் நிலையம்" என்பது பின்வருமாறு பொருள்படும்:—

(அ) 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கிச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் உரிமம்பெற்ற வர்த்தக வங்கியொன்று;

(ஆ) 1979 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, இலங்கைத் தேசிய அபிவிருத்தி வங்கிச்சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கைத் தேசிய அபிவிருத்தி வங்கி;

(இ) 1975 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, அரச ஈட்டு முதலீட்டு வங்கிச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட அரச ஈட்டு முதலீட்டு வங்கி;

(ஈ) (165 ஆம் அத்தியாயமான) இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம்;

(உ) எந்தக் கம்பனி அல்லது கூட்டுறவுச் சங்கம் தொடர்பில் 6 ஆம் பிரிவின் கீழான கட்டளையொன்று ஆக்கப்பட்டுள்ளதோ அந்த ஏதேனும் கம்பனி அல்லது ஏதேனும் கூட்டுறவுச் சங்கம் எனப் பொருளாகும்.

(2) இச்சட்டத்திலுள்ளதெதுவும், (1) ஆம் உட்பிரிவின் (ஆ), (இ), (ஈ) என்னும் பந்திகளின் கூறப்பட்ட ஏதேனும் நிறுவனத்துக்கு, உள் நாட்டு நம்பிக்கைப்பொறுப்புப் பற்றுச்சீட்டுகளை எழுதி நிறைவேற்றிய தன் பயனுகக் கடன்களை வழங்குவதற்கு அல்லது எவையேனும் கடன் வழங்கு வசதிகளை அளிப்பதற்கு, அத்தகைய கடன்களை வழங்குவதற் கான அல்லது அத்தகைய வசதிகளை அளிப்பதற்கான தத்துவம், அத்த கைய நிறுவனத்தின் தாபிப்பு, தத்துவங்கள், பணிகள் என்பவற்றுக்கு ஏற் பாடு செய்கின்ற சட்டத்தினுல் அத்தகைய நிறுவனத்துக்கு அளிக்கப்படா விடின், அதிகாரமளிப்பதாகக் கருதப்படுதலோ பொருள் கொள்ளப்படு தலோ ஆகாது.

வர்த்தகப் பணிப்பாளரின் தத்துவங்கள்.

6. வர்த்தகப் பணிப்பாளர், தேசிய பொருளாதாரத்தின் நலன்கருதி அவ்வாறு செய்வது தோதானதென அவர் கருதுகின்றவிடத்து, கசெற் றில் வெளியிடப்படும் கட்டளைமூலம், இச்சட்டத்தின் ஏற்பாடுகள், 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் கீழ்ப் பதிவு செய்யப்பட்ட ஏதேனும் கம்பெனிக்கு அல்லது குறிப்பீடு செய்யப்படாத தும், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகப் போதிய நிதி நிலையுறுதியும், வளமும் கொண்டதுமென அவர் கருதுவதுமான 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் கீழ்ப் பதிவு செய்யப் பட்ட ஏதேனும் கூட்டுறவுச் சங்கத்திற்கு ஏற்புடையனவாதல் வேண்டு மென வெளிப்படுத்தலாம்.

ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

7. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ் வாமை இருக்கும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண் டும்.